எழிலமிகு இயற்கைக் காட்சிகளை வர்ண புகைப்படத்திற் பதிக்கும், தரமான
Sakura - Fuji - Kodak
வர்ணப் புகைப்படச் சுருள்களைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 28628

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/=

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

* தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
* கம்பியூட்டர் முறையில்,
* குறைந்த செலவில்
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி
ஜுவல்லர்ஸ்
(பிறைவேட் லிமிட்டெட்)
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்,
தொலைபேசி: 28628

பிரதி: 1 யாழ்ப்பாணம் அகவை ஆறு சித்திரை மீ 24 புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஷஃபான் பிறை 27 (07-05-1986) UTHAYAN A RIVERY TAMIL DAILY இதழ்: 145

'ரெலோ' தலைவர் சிறிசபா கொலை

சகா ஒருவருக்குக் காயம்

ஏனையோரை சரணுகுமாறு ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு

— அலுவலகச் செய்தியாளர் பி. வனிதராஜன் —

யாழ்ப்பாணம், மே 7

'ரெலோ' என்று அழைக்கப்படும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் தலைவர் திரு சிறி சபாரத்தினம் நேற்றுக் கொலையுண்டார்.

அவரது சகா ஒருவர் காயமடைந்தார். காயமடைந்தவரும் மற்றொருவரும் இளைஞர் கோஷ்டி ஒன்றிடம் பிடிபட்டதாகவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்று பிற்பகல் கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த அவர்களை என்ற இடத்திலேயே சிறி சபாரத்தினம் கொலையுண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அப்பகுதியில் சிறி சபாரத்தினம் கொலையுண்டமை செய்தி ஒலிபெருக்கிமூலம் அறிவிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் சுமார் 3-15 மணியளவில் அல்லைப்பிட்டி பகுதியைச் சேர்ந்த இளைஞர் கோஷ்டி ஒன்று அப்பகுதியில் நேற்றுக் நடத்தியதாகக் கூறப்படுகிறது.

அங்குள்ள வீடு ஒன்றிலிருந்து தப்பி, பின்னர் உள்ள புகையிலை தோட்டம் ஒன்றிற்குள் ஓட முயன்ற சமயம் சிறி சபாரத்தினம் இளைஞர் கோஷ்டியிடம் அகப்பட்டதாகவும்—

மோதலின் பின் அவர் கொல்லப்பட்டதாகவும் அப்பகுதியிலிருந்த இடத்தில் செய்திகள் கூறுகின்றன.

உயிரிழந்த சமயம் சிறி சபாரத்தினம் சாரமும் சேட்டும் அணிந்திருந்தார்.

சகாவுக்கு காயம்

ரெலோ இயக்கத்தில் சிறி சபாரத்தினத்தற்கு அடுத்த தலைவர்களுள் ஒருவராகக் கருதப்படும் அவரது சகா ஒருவர் காலில் காயத்துடன் இளைஞர் கோஷ்டியிடம் அகப்படுத்து கொண்டார். மற்றொரு முக்கியமுள்ளவரும் பிடிபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருவர் தப்பினர்

சபாரத்தினத்துடன் மறைந்திருந்த தாகக் (4 ஆம் பக்கம் பார்க்க)

விடுவிப்பு

புத்தாண்டுக்கு முதல் நாள் மட்டக்களப்பில் வைத்துக் கடத்தப்பட்ட ரிசிசிவ் பொலீஸ் காவல் படையான கமலராசா கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்டார்.

உல்லாசப் பயணிகள் பலர் பதிவுகளை ரத்து!

கொழும்பு, மே 7

ஏயர் லங்கா விமானம் தாக்கப்பட்ட சம்பவத்தையடுத்து இலங்கையில் பல பாகங்களிலும் உந்து தகுதியற்றதாக ஹோட்டல்களில் அறைகளைப் பதிவு செய்த உல்லாசப் பிரயாணிகள் பலர் தமது பதிவுகளை ரத்துச் செய்து வருகிறார்கள்.

விமானத் தாக்குதல் உல்லாசப் பிரயாணத்துறையில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தும் என கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

எருவில் கிராமத்தில் இளம் பெண் கைது!

மட்டக்களப்பு, மே 7

கடந்த திங்கட்கிழமை மட்டுமுதல் தொகுதி எருவில் கிராமத்தைச் சுற்றி வளைத்த காவலாளிகள் கோஷ்டி முகாமைச் சேர்ந்த பொலீஸ் கொமாண்டோக்கள் 15 பேரைக் கைது செய்து கொண்டு சென்றனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் இளம் பெண்ணும் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெல்லிப்பளையில் இளைஞர் கோஷ்டிகள் நேற்று மோதல்

யாழ்ப்பாணம், மே 7

தெல்லிப்பளைப் பகுதியில் நேற்று இரண்டு இளைஞர் கோஷ்டிகளுக் கிடையே மீண்டும் மோதல்கள் ஏற்பட்டன.

சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:-

நேற்று அதிகாலை சுமார் நான்கு மணியளவில் இளைஞர் கோஷ்டி ஒன்று தெல்லிப்பளை, ஏழாலை, கட்டுவன் பகுதிகளைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தியது.

தேடுதலின் போது மறைவு கோஷ்டியுடன் மோதல் ஏற்பட்டது.

இச் சம்பவத்தில் சிலர் (4 ஆம் பக்கம் பார்க்க)

தி. மு. க. உறுப்பினர்கள் வெளிநடப்பு

புதுடில்லி, மே 6

இலங்கை இனப்பிரச்சினை குறித்து இந்திய ராஜ்ய சபையில் விவாதம் நடந்த சந்தர்ப்பம் மறுக்கப்பட்டதாகத் தி. மு. க. உறுப்பினர் கோபாலசாமியும், அன்னரியும் சபையிலிருந்து இன்று வெளிநடப்புச் செய்தார்கள்.

மாலைதீவுக்கு சரக்கு அனுப்புவது இடைநிறுத்தம்

கொழும்பு, மே 7

கட்டுநாயக்கா விலிருந்து இந்திய பாவுக்கும் மாலைதீவுக்கும் விமான மூலம் சரக்குகள் அனுப்புவது மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது

கடந்த சனி கட்டுநாயக்காவில் இடம்பெற்ற விமானக்குண்டு சம்பவத்தைத் தொடர்ந்தே, இத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

பூஸாவுக்கு 46 பேர்

திருகோணமலை, மே 7

திருகோணமலை மாவட்டத்தில் ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழ் இளைஞர்களில் 46 பேர் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

தம்பலகாமம், கிளிவெட்டி, மூதூர்ப்பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டு இருந்தனர்.

அரசின் புதிய கருத்துப் பற்றி

இந்தியாவின் அபிப்பிராயத்துடன் டிக்ஸிற் திரும்புவார்

கொழும்பு, மே 7

இலங்கை தேர்விற்கு புதிய கருத்துக்கள் பற்றிய இந்தியாவின் அபிப்பிராயத்துடன் தான் டில்லி சென்ற இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் கொழும்பு திரும்புவார்.

இப்படி கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டன.

இதனிடையே வெளிநாடு செல்ல அமைச்சர் லலித் அத்துலத்முதலி, வார இறுதியில் நாடு திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய நாடு ஒன்றுக்குத்தான் அமைச்சர் லலித் செல்கிறார் என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

தலைமன்னார் கடலில் நடந்த நேரடி மோதல் படகுகள் சேதம்

யாழ்ப்பாணம், மே 7

தலைமன்னார் கடலில் திங்கள் இரவு படகுகளில் சென்றுகொண்டிருந்த கடற்படையினருக்கும் மூன்று படகுகளில் எதிரே வந்த [illegible] தாவது:-

தலைமன்னார் கடலில் சோந்த சென்றுகொண்டிருந்த கடற்படையினருக்கும் மூன்று படகுகளில் எதிரே வந்த இளைஞர்களுக்கும் கடற்படையினருக்கும் இடையே நடைபெறாத மோதல் இடம் பெற்றது.

இதுபற்றி அறியப்படுவதாவது:-

தலைமன்னார் கடலில் சோந்த சென்றுகொண்டிருந்த கடற்படையினருக்கும் மூன்று படகுகளில் எதிரே வந்த இளைஞர்களுக்கும் இடையே இரவு 11 30 மணியளவில் நேரடிச்சமர் மூண்டது.

இச்சமர் சுமார் 2 மணி நேரம் நீடித்தது.

பதிலுக்குப் பதில் வேட்டுக்கள், வெடிகுண்டுகள், ரொக்கட்லோஞ்சர்கள் பாவனையை சமரின் போது பயன்படுத்தப்பட்டன.

இச்சமரைத் தொடர்ந்து ஹெலிகொப்டர் ஒன்று படகுகள் மீது குண்டுகளை வீசியபோது அதன் நோக்கி வேட்டுக்களும் லோஞ்சர் போன்றவையும் பிரயோகிக்கப்பட்டன.

பலத்த சமரின் பின் இளைஞர் தெரியாதவாறு வள்ளப் படகு ஒன்று சேதம் அடைந்தது. அதில் சென்றவர்கள் பற்றி விபரம் எதையும் அறியமுடியவில்லை.

அப்படகில் சென்றவர்கள் மற்ற படகுகளில் தப்பிச் சென்றிருக்கலாம் அல்லது உயிர் இழந்திருக்க (4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

7-5-1986

புதன்கிழமை

சுபநேரம்:
4.25 முதல் 5.55 வரை
ராகுகாலம்:
11.55 முதல் 1.25 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

ஆக்கினி நாளாரம்பம்

ஜனாதிபதி சொல்கிறார்:

வடக்கு-கிழக்கு இணைப்பே பெரும் முட்டுக்கட்டை

ஒப்பந்தம் செய்தால் நிறைவேற்றியே தீருவேன்

கொழும்பு, மே 7

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதில் பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது, வடக்கு - கிழக்கு மாகாணங்களை இணைக்கும் விஷயமே

வாணமே இடிந்து விழுந்தாலும், நான் ஏதாவது ஒப்பந்தத்தைச் செய்தால் எவர் எதிர்த்தாலும் அதை நிறைவேற்றியே தீருவேன்.

இப்படி ஜனாதிபதி ஜெயவர்த்தனா நேற்று குளூஸைத்தார்.

நேற்று நடந்த அரசாங்க நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் திரு. ஜெயவர்த்தனா இவ்வாறு தெரிவித்தார். திரு. ஜெயவர்த்தனா மேலும் சொன்னதாவது:-

1957 இல் பண்டா—செல்வா ஒப்பந்தம் உருவானது அந்த ஒப்பந்தத்தில் இருந்த வடக்கு-கிழக்கு இணைப்பு பற்றிய அம்சத்தை யு. என். பி. எதிர்த்தது. இன்றும் எதிர்த்து வருகிறது.

நற்சமயம் இனப்பிரச்சினைக்கு சில தீர்வுகளை நாம் எடுக்க இருக்கின்றோம். அந்தத் தீர்வை யார் எதிர்த்தாலும் நான் அமுல் நடத்தியே தீருவேன் — இப்படி திரு. ஜெயவர்த்தனாசொன்னார்

விமான விபத்து:

கமிட்டியிலிருந்து தமிழர்கள் 'அவுட்'!

கொழும்பு, மே 7

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பந்தமான விசாரணைக்கு ஒருங்கிணைக்க நியமிக்கப்பட்ட கமிட்டியில் இருந்த இரண்டு தமிழருக்குப் பதிலாக வேறு ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏயர் லங்கா மாலைதீவுப் பகுதி முகாமையாளர் திரு ஆர். வி. சண்முகநாதன், பொறியியலாளர் கே. பூபதி ஆகியோர் அக்கமிட்டியில் உறுப்பினர்களாக முன்னர் நியமிக்கப்பட்டிருந்தனர்.

பின்னர் இந்த உறுப்பினர்களுக்குப் பதிலாக ஏயர் லங்கா பிரதம செயலாக்க அதிகாரி திரு ஆர் டபிள்யு. ரணசிங்க நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இது பற்றிய விசாரணைக் குழுவுக்கு சட்டம் கோர்ட் நீதிபதி ஒருவர் தலைவராக நியமிக்கப்பட உள்ளார்.

முச்சந்தி முனை



ஓ. பிக்கே அவை தமிழரை விசாரணை வேண்டுவிடுவோமே. தங்களுக்குத் தெரிந்தவையோ, தெரியாதவையோ தமிழரென்றால் அவைக்கு சந்தேகப் போர்வையினால் பயன்கர்னா தியனும் தானே..!

கிண்ணியாவில் 4 முஸ்லிம்கள் பலி; 9பேர்காயம்; 5பேரை காணவில்லை!

திருகோணமலை, மே 7

முதூர்த் தொகுதியில், கிண்ணியாப் பட்டினத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு நடந்த தாக்குதலில் 4 முஸ்லிம்கள் துப்பாக்கிச் சூடு நடாகி இறந்தனர். 9 பேர் காயமடைந்தனர். 5 பேரைக் காணவில்லை.

இனந்தெரியாத இளைஞர் கோஷ்டி ஒன்று இத் தாக்குதலை நடத்தியது.

யுவதிகள் உட்பட சுமார் 80 பேராளிகள் இத் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்டதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை பகல் இரண்டு தமிழ் இளைஞர்களை கிண்ணியாவில் உள்ள முஸ்லிம் வர்காவல் படையினர் பிடித்து ஆயுதப் படையினரிடம் ஒப்படைத்தனர். அதன் பின்னர் அவர்கள் இருவரும் சமரசம் அருந்தி தற்கொலை செய்துகொண்டதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்தே திங்கள் தாக்குதல் இடம்பெற்றதாகச் சொல்லப்படுகிறது.

இறந்தவர்களின் பெயர்கள் வருமாறு:

1. முகம்மது சுல்தான், (வயது 26) இவரின் சடலம் உப்பாறு எனுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

2 சின்னமிக்கார் கலந்தான் (56 வயது) இவரின் சடலம் புஹாரியடிச் சந்தியில் இருந்தது

3 செயினுலாப்தீன் அப்துல் சமது (வயது 55) ஓய்வுபெற்றவர் - இவரின் சடலமும் புஹாரியடிச் சந்தியில் கிடக்கக் காணப்பட்டது.

4. அப்துல் சமது அப்துல்லா, (வயது 43). ஆசிரியர் இவரின் சடலம், குறிஞ்சாக்கேணியில் காணப்பட்டது.

திருமலை நீதிவான் களின் ராஜபக்ஷ, கிண்ணியாவுக்கு நேற்றுக் காலை சென்று சம்பவம் நடந்த இடங்களைப் பார்வையிட்டார்.

பிரேத பரிசோதனைக்கு (4-ஆம் பக்கம் பார்க்க)

பீரங்கி வேட்டு 'ஹெலித்' தாக்குதலும் 15 கடைகள் தீக்கிரை

திருகோணமலை, மே 7

கடந்த திங்கள் இரவு கிண்ணியாவில் நடந்த தாக்குதலைத் தொடர்ந்து அப்பகுதியில் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன ஹெலிகொப்டர் தாக்குதலையும் இடம் பெற்றன

இதனிடையே அப்பகுதியில் 15 கடைகள் கொள்ளை தீக்கிரையாக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகிறது.

திருமலை மாவட்ட இணைப்பு அதிகாரி பிரேமசேகர ஹர்ஷராஜாவினால் கூட்டப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் கிண்ணியா சென்று நிலைமையைப் பார்வையிட்டனர்.

இதனிடையே கிண்ணியாவில் இருந்து அகதியாக வந்த பெண்கள், மற்றையோர் நேற்று திருமலைக்கு வரவில்லை.

வடக்கு-கிழக்கு இணையாத தீர்வை கூட்டணி ஏற்காது

கிழக்கிலங்கைப் பிரமுகர்கள் கருத்து

மட்டக்களப்பு, மே 7

வடக்கு-கிழக்கு இணையாத எந்த ஒரு தீர்வையும் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்றுக் கொள்ளாது

கிழக்கு மாகாண கூட்டணிப் பிரமுகர்கள் இவ்வாறு உறுதிபடக் கூறினார்கள்.

இலங்கை அரசு தெரிவித்தபடிக்கும் புதிய கருத்துக்கள் குறித்து கூட்டணியின் நிலை என்ன எப்பது குறித்து கேட்கப்பட்டபோதே, அவர்கள் இப்படித் தெரிவித்தனர்.

ஜே. வி. பி. தொடர்புடைய தமிழர்கள் கைது

கொழும்பு, மே 7

தடைசெய்யப்பட்ட அரசியல் கட்சியான ஜாதிக விமுக்தி பெரமுனையுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் 7 தமிழர்களை தெகிவளை பொலீஸ் விசாரணைப் பிரிவு கடந்த வாரம் கைது செய்தது.

ஜாதிக விமுக்தி பெரமுனையின் தீவிரவாத அங்கத்தவர்கள் சிலர் கைது செய்யப்பட்ட பொழுதே இத் தமிழர்களும் கைது செய்யப்பட்டனர்.

மட்டக்களப்பில் கொள்ளை!

மட்டக்களப்பு, மே 7

மட்டக்களப்பு மாநகர சபை காரியாலயத்திற்குள் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் புகுந்த ஆயுதம் தாங்கிய கொஷ்டி ஒன்று அங்கு காசாளிடமிருந்து ஆயிரத்து அறுநூறு ரூபா பணத்தைக் கொள்ளையிட்டுச் சென்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தங்கத்துரை சென்னையில் பேட்டி

வடக்கு கிழக்கில் யாழ் தமிழர் ஆதிக்கம் மேலோங்கும் என்பது சரியல்ல

சென்னை, மே 6

யாழ் மாவட்டத்தில் வாழும் தமிழர்களை விட வெளியே அதிக எண்ணிக்கையில் தமிழர் வாழ்கின்றனர். ஆகவே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணத் தமிழரின் ஆதிக்கம் தான் மேலோங்கி நிற்கும் என்று கூறுவதை நாம் ஏற்கமுடியாது.

முதுநிலை முன்னாள் எம்.பி. திரு. அ. தங்கத்துரை 'தினகர'க்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

நான் திருமலை வாசி. திருமலை மக்களுக்கு முதலில் ஒரு பயம் இருந்தது உண்மை.

அது, யாழ் தமிழர்கள் படிப்படியாக பெற்றவர்கள் பல பகுதியில் கடமையாற்றியவர்கள் என்பதே.

அது அச்சமயம் நடந்த நிகழ்ச்சிகளினால் ஏற்பட்ட அச்சமே தவிர முழுமையாக யாழ் மக்களிடம் ஏற்பட்ட அவநம்பிக்கை அல்ல

இன்று நிலைமை மாறி விட்டது. நாம் அனைவரும் பொது எதிரியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம்

அது மட்டும் அல்ல யாழ்ப்பாணத் தமிழரின் மனோநிலையும் பெரிதும் மாறி விட்டது

ஆகவே மலையக மக்கள் குடியேறித்தான் யாழ் மாவட்டத்துக்கு அப்பால உள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்ற நிலை இல்லை'

இப்படி திரு. தங்கத்துரை சொன்னார்.

மக்கள் முகம்

இந்துக் கல்லூரி உப-அதிபர் ஓய்வு பெறுகிறார்

யாழ்ப்பாணம், மே 7

மருத்துவத்துறைக்கு மட்டுமல்ல அனுமதி பெற்ற மாணவர் சைவ சமய ஆசார முறைகளுக்கு அந்த உயர்கல்வி ஒவ்வாது என கருதி அதிருந்து ஒதுங்கிக்கொண்டார் இத்தலைமை சைவப் பெருந்தகை வாழ் இந்து உப-அதிபர் திரு முத்துக் குமாரசுவாமி இத்தகவலை விடுத்த — சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார்.

இவர் தம் மாணவப் பருவத்தில் முதன்மை மான மாணவனாய் சேணக்காலத்திலிருந்த நல்லாசிரியனாய் எவ்வாறு இருந்தாரோ அவ்வாறே இறுதிவரை வாழ்வோடு இழைந்து வாழ்ந்த, வாழுகின்ற பெருந்தகை யாவார். சுன்னாகம் மட்டத்தில் மட்டுமல்ல வடபகுதி பூராவும் சைவ நெறிமுறைகளை பேணி காப்பதில் உணர்வுடன் முன்னின்று உழைப்பவர்

மருத்துவனாய் தொழிற்பட வேண்டியவர் விஞ்ஞான பாடத்தை கற்பிப்பதில் விசேடத்துவம் உள்ளமையால் மட்டுமல்ல நல்லாசிரியனாய் மாணவர்களுக்கு வளர்புடன் கடமையாற்றியவர் புதிய தலைமுறையினரும் செயற்படுத்தி வருகின்றார்

சமய விழா வைபவங்கள் நிறைவடையுந்த விட்டால் விடு செல்லாது தங்கியிருந்து தொழிற்படுவார். வெளிநாட்டுடன் நிலைபத்திய ஜீவநாடி. சோமசுவாமியின் வழித்தோன்றலாக செயற்பட்டவர்.

உயர்திரு ராக சேவை பாரதிபரவாத்திக் அதிபருக்கு இவரவனாய் வேண்டிய நேரத்தில் நல்லாலோசனைகள் அளித்து நல்லவனாய் திகழ்ந்தார்.

நெய்வீகமான பண்புடன் திகழும் கவர்ச்சிகரமான இனிய தொற்றமும் இவரது சாதுரியமான சாதுவான அணுகுமுறையும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பல ஆசிரியர்களையும் மாணவர்களையும் கவர்ந்திருக்க பிடிபற்றப்பட்ட ஒரு புதிய பாணியாகும், தற்போதைய நிர்வாகத்தினர் பிடிபற்ற வேண்டிய முன்மாதிரி இதுவாகும்.

—பொ. ஸ்ரீஸ்கந்தராசா

சிறு விளம்பரம்

காணவில்லை

007AB4181 இலக்கமுள்ள ஏசியா லைசென்ஸ் 25 - 4 - 86இல் கொழும்பில் சந்தியில் காணாமற்போய்விட்டது. கண்டெடுத்தவர்கள் சு. தீபாநந்தன், 600 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலோ ஒப்படைக்கவும்.

ஓய்வூதியர் நலன்புரி சங்கம் மௌன அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 7

காலஞ் சென்ற கண்டிமணி கணபதிப்பிள்ளையின் ஆத்ம சாந்திக்காக இரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

ஓய்வூதியர் நலன் புரிச் சங்கத்தின் இரண்டாவது ஆட்சிமுறை கூட்டத்திலேயே மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது

TENDER NOTICE

NORTH LANKA MEDICAL COLLEGE

Moolai, Chulipuram.

The President / Secretary of the Board of Governors, North Lanka Medical College, Jaffna invites tenders for the construction of a building to house the Anatomy Section of the College within the premises of the Co-operative Hospital, Moolai from competent and registered Contractors whose registration value is Rs. 500 000/ and over.

Those desirous of tendering are requested to send their tenders (in duplicate) on forms obtainable from the office of the North Lanka Medical College on payment of a refundable deposit of Rs 500/- and a non-refundable deposit of Rs 100/-. Tender documents could be obtained from the office of the Registrar, North Lanka Medical College, Moolai, before 4 p.m. on 21-05-86. Tenders close at 4 p.m. on 30 05-86.

DIRECTOR,
North Lanka Medical College.

ஆயுதப்படை முகாமுக்கு

பிள்ளைகளைத் தேடிச் சென்றால் கையை விரிக்கிறார்கள்

அரசஅதிபரிடம் அன்னையர் மகஜர்

மட்டக்களப்பு, மே.7

எமது பிள்ளைகள் ஆயுதப்படையினரால் காணாது செய்யப்பட்டதாக தகவல் அறிந்து ஆயுதப் படை முகாமுக்குச் சென்றால் அதிகாரிகள் அங்கு கையை விரிக்கிறார்கள். நாம் காணாது செய்யவில்லை என கூறுகிறார்கள். எமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என அறிவதுமுடியாமல் தவிக்கின்றோம்

மட்டக்களப்பு அன்னையர்கள் அரசாங்க அதிபர் திரு எம். அந்தோனிமுத்துவை நேரடியாகச் சந்தித்து கையளித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது

மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

எமது பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் சமயத்திலும் வேறு அலுவல்களுக்கு செல்லும் போதும், காணாது செய்யப்படுகின்றனர்.

காணாது செய்யப் படுபவர்கள் பற்றிய விவரங்கள் உடனடியாக உங்களுக்குத் தெரிவிக்கப்பட்டால் எங்கள் பிள்ளைகளுக்கு உயிராபத்து நிகழச் சந்தர்ப்பம் இருக்காது

எனவே பிள்ளைகள் ஆயுதப்படையினரால் காணாது செய்யப்பட்டால் ஒரு தினத்துக்குள் எங்களுக்கு அறிவிக்க ஆவன செய்யவேண்டும்.

காணாது செய்யப்படுவோர் பற்றி பிரஜைகள் குழுவிடம் தெரிவிக்க வேண்டும் என்றகருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டும்

அது நடைமுறைப்படுத்தப் படுவதில்லை.

எனவே காணாது செய்யப் படுவோர் தொடர்பான விவரங்களை உடனுக்குடன் நீங்கள் பெற்றுக் கொள்ள தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோருகின்றோம்.

அவற்றை எமக்குத் தெரியப்படுத்தி உதவ வேண்டும்.

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வேலணையில் விசர் நாய் தடுப்பு ஊசி

இன்று முதல் ஏற்றப்படும்

வேலணை, மே 7

வேலணை ரோம சபை எல்லைக்குட்பட்ட வீடுகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்வராது தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இதன் ஆரம்பமாக நடுப்பூதி மருந்து ஏற்றுவதற்கான நடவடிக்கைகளை வேலணை மேற்குப் பகுதி கிராமசபை பரிசோதகர் சி. சிவகுமாரமணியம் மேற்கொண்டுள்ளார்.

இன்படி இன்று 7ஆம் திகதி வேலணை இராமலிங்கம் வித்தியாலயத்திலும் நாளை கலைமகள் சனசமூக நிலையத்திலும், நேதாஜி சனசமூக நிலையத்திலும்; 9 ஆம் திகதி தேவி கோட்டம் சனசமூக நிலையத்திலும், வேலணை துறையூர் சர்வோதய நிலையத்திலும், 10 ஆம் திகதி சோனாவத்தை சனசமூக நிலையத்திலும், ஆனைக்கோட்டை முருகமூர்த்தி ஆலயம் ஆகிய இடங்களிலும் வைத்து நாய்களுக்கு தடுப்பு ஊசிகள் போடப்படும்

செல்வச்சந்நிதி. மண்டூர் கோயில்கள்

சேதம் முருகனுக்குச் சவால்

இந்து சமய கூட்டத்தில் உரை

மட்டக்களப்பு, மே.7

வடக்கே செல்வச் சந்நிதி முருகனுக்கும், கிழக்கே மண்டூர் முருகனுக்கும் உரிய கோயில்கள் அழிவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. இத்தகைய செயல்கள் முருகனுக்கு சவால் விடுக்கப்பட்டது போல் அமைகின்றது.

மட்டக்களப்பு இந்து சமய விருத்திச் சங்கத்தின் 28 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய கோட்டக்கல்வி அதிகாரி திரு. வி. கணபதிப்பிள்ளை இவ்வாறு கூறினார்.

ஓய்வு பெற்ற அதிபர் திரு. க. நடராசமுதலி தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

நாவலர் காட்டிய வழி நல்வழி, அது நல்லவழி அவர்கள் நமக்கு அளித்த வி. டு செல்ல சைவத் திருநெறியையும், நெற்றியில் திருநீறு அணியும் பண்பாட்டையும் அழிய விடாது பேணி பாதுகாக்க வேண்டும்.

அவ்வாறு பாதுகாக்கப்பட்ட சைவ சமய மக்கள் சைவ சமயத்தவர்களாகவே வாழ வேண்டும்.

பிறப்பினால் கிடைக்கப் பெற்ற சைவ சமய உரிமையினை நாம் எவருக்கும் விட்டுக் கொடுக்கக் கூடாது.

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நகரில் பிரசங்கம் செய்தபோது இந்து மதம் மறுபிறப்பெடுத்தது என்று கூறப்பட்டது.

எத்தனையோ ரிஷிகளாலும் இறையுணர்வு பெற்ற முனிவர்களாலும் பெருமைப்படுத்தப் பட்டது இந்து சமயம்.

இந்து மதத்துக்குச் சேவை செய்ய இளைஞர்களும் யுவதிகளும் முன்வர வேண்டும். பதினாறு இளைஞர்கள் எம்பின்னேவாருங்கள் நாம் உலகத்தைத் திருத்தித் தருகின்றோம் என்றார் சுவாமி விவேகானந்தர்.

எனவே சமய வளர்சிக்கும் பண்பாட்டு வளர்ச்சிக்கும் இளைஞர் யுவதிகளின் தொண்டு மிகமிக அவசியம் என்பது தெரிவருகிறது.

இப்படி அவர் கூறினார்.

விமான மூலம்

பொதிகள் அனுப்ப கட்டுப்பாடு

கொழும்பு, மே 6

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்திலிருந்து விமானங்களில் பொதிகள் அனுப்பப் படுவதற்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

சனிக்கிழமை இடம் பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்தே இந்தக் கட்டுப்பாடு நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளது.

விமானங்களில் அனுப்பப்படும் பொதிகள் 48 மணித்தியாலங்களுக்கு முன்னர் விமான நிலையத்தில் கையளிக்கப்பட வேண்டும்—இப்படியும் புதிய நிபந்தனை கூறுகிறது.

மக்கள் அன்பைப் பெற்ற அமரர் வயிரமுத்து

சங்கானை முன்னாள் பட்டினசபைத் தலைவர் திரு வி. வயிரமுத்து மறைந்து ஒரு மாதம் சென்று விட்ட போதிலும் அவரது சேவையை மறந்து விடுவதற்கில்லை.

பட்டின சபைகளின் எல்லைக்குள் பலர் இருந்த போதிலும் ஒரு சிலரே சபைகளை நிர்வகிப்பதற்கு தகுதி பெறுகின்றனர். இந்த வரிசையில் திரு வயிரமுத்துவும் ஒருவர். எதிலும் நிதானத்துடன் தனது கருத்தை எடுத்துக் கூறி நேர்கத்தை செம்மைப்படுத்த அவர் தவறியதில்லை.

அமைதியான, சலனப்படாத இவர் 1-2-58 ஆம் திகதி நொடக்கம் இயங்கிய முதலாவது பட்டின சபையின் இரண்டாம் வட்டார உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு தனது சேவையை செய்து வந்தார்

பின்னர் 1969 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மீண்டும் அதே வட்டாரத்திற்கு அங்கத்தவராக தெரிவு செய்யப் பட்டு 12-1-69 இல் உப தலைவராகவும் பின்னர் 20-12-69 தொடக்கம் அதன் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டு மாவட்ட அபிவிருத்திச் சபை பொறுப்பேற்கும் வரை (ஒரு சிறு காலம் நிர்வாக) அப்பதவியை வகித்து வந்தாரென்பது குறிப்பிடத்தக்கது

திரு. வயிரமுத்து தான் மேற்கொள்ளும் காரியங்களை மிகவும் நுணுக்கமாகவும் அவதானமாகவும் செய்யவதில் ஆற்றல் படைத்தவர்.

சபையின் ஆரம்ப காலத்தில் அவரது வட்டாரத்தில் குடி நிலம் இல்லாத வதி குறைந்த மக்களின் நலன் கருதி ஓர் குடியேற்றத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

அயரா முயற்சிக்கும் இதன் பின்னர் மேலும் விஸ்தரிப்புகளுக்கும் இவ் ஆரம்பத்திட்டம் மிகவும் உதவியாக இருந்ததென்னலாம்.

1969 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நற்பொதைய பிரதமர்—உள்ளூர் ஆட்சி மந்திரியாக இருந்து சங்கானைக்கு வருகை தந்த பொழுது அவரை வரவேற்று கல்கான் பட்டின சபையின் தேவைகள் பற்றிய மகஜர் ஒன்றையும் திரு. வயிரமுத்து வழங்கி இருந்ததை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

இதனால் அவர்சங்கானைப் பட்டினசபை மக்களின் அபிலாஷையை கருத்தில் கொண்டது தெளிவு படுத்தப்பட்டுள்ளது

பல தரப்பட்ட மக்களின் அன்பையும் அபிமானத்தையும் பெற்ற திரு வயிரமுத்து நிறு காலம் நோய்வாய்ப்பட்டு இருந்த போதிலும் இறுதி வரை தனது இலட்சியத்தையும் செயற்பாடுகளையும் தன்னிடமிருந்து விலக்கி கொள்ள விரும்பவில்லை

அவரது செயற்பாடுகளும் கொள்கைகளும் மேற்கொள்ளும் காரியங்களை பிறர் [illegible] வேண்டும். [illegible] இருக்க வேண்டும்.

வளர்ந்து வரும் இளம் நடிகர் பாண்டியன்

தமிழ்த் திரையுலகின் வளர்ந்து வரும் இளைய தலைமுறை நடிகர்களில் பாண்டியனும் ஒருவர்.

பல வெற்றிப் படங்களில் நடித்துப் பாராட்டுக்களைப் பெற்ற பாண்டியன், இப்போது முற்றிலும் மாறுபட்ட கேரக்டர்களை ஏற்று நடித்துக் கொண்டிருக்கிறார்.

அவர் சொல்கிறார்: 'ஒவ்வொரு படத்திலும் வெவ்வேறு விதமான கேரக்டர்களைத்தான் ஏற்றுக் கொண்டிருக்கிறேன். வெற்றி தோல்வி எது வந்தாலும் ஏற்றுக் கொள்கிறேன் காரணம், என்றும் நான் நானாகவே இருக்கிறேன்.

நடிப்புத்துறையில் கற்றுக் கொள்ள வேண்டியது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. அதை எல்லாம் இன்னும் கொஞ்சம் கொஞ்சமாக கற்றுக் கொண்டுதான் இருக்கிறேன்.

'ஆண்பாவம்' படத்திற்குப் பின் பல படங்களில் நடிப்பதற்கு வாய்ப்புகள் வந்திருக்கின்றன. எல்லாவற்றையும் ஒப்புக்கொள்ளாமல் நல்ல கேரக்டர்கள் உள்ள படங்களை மட்டும் ஏற்றுக் கொண்டிருக்கிறேன்

கலைஞானத்திலிருந்து ஜோதிமலர், நடிகர் திலகம் சொர்ணமே சுடர்—பத்மினி இணைந்து நடிக்கும் கே. ஆர். ஜியின் புதிய படம், ரவிராஜன் இயக்கும் படம் உட்பட பல படங்களில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறேன், என்றார்

இதுவரையில் பல விதமான கதாபாத்திரங்களை ஏற்று நடித்திருக்கும் பாண்டியன் கொண்ட கொள்கையை நிறைவேற்றத் துடிக்கும் ஒரு தீவிர வாதி வேடம் ஏற்ற நடிக்கவேண்டும் என்று எண்ணத்தோடு இருக்கிறாராம்.

'முதல் வசந்தம்', 'கடைக்கண்பார்வை' எனக்கு நிச்சயம் நல்ல பெயரைத் தேடித்தரும் என்கிறார் பாண்டியன்.



உவர்மலையில் ஒருவர் சிக்கினார்

திருகோணமலை, மே 6

திருகோணமலை, உவர்மலைப் பிரதேசத்தில் கடந்த ஞாயிறு பிற்பகல் பொலீஸார் தேடுதல் நடத்தினர்.

குடியிருப்பாளர்கள் அனைவரும் பொலீஸ் நிலையத்துக்குக் கொண்டு போகப்பட்டு முகமூடி நபர் முன்னால் நிறுத்தப் பட்டனர்.

ஒரு இளைஞனைத் தவிர ஏனையோர் விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

முகமூடி தலையாட்டிய வரைத் தொடர்ந்தே அந்த இளைஞன் தடுத்து வைக்கப் பட்டார்.

முகமூடியிடம்

விடுவிக்கப்பட்டுள்ளார்

அஸ்பெஸ்ரோஸ் சீமெந்துத் தொழிற்சாலை முகாமைப் பணிப்பாளர் திரு ம. கணேசன் அவர்களை எங்களது வேண்டுதலுக்கு இணங்க 4-5.86 அன்று எழுதிய நிபந்தனையுமின்றியும் கண்ணியமான முறையிலும் மீட்டுத் தந்தமைக்கும், எமது சாத்வீகப் போராட்டத்திற்கு உதவியும், ஒத்தாசையும் நல்கி எமது போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல உறுதுணையாய் நின்றவர்களும் வர்த்தக விநாடனத்திலுள்ளோரும் பொதுமக்களுக்கும், நண்பர்களுக்கும் எமது மனம் கனிந்த நன்றியை மனப்பூர்வமாகத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இப்படிக்கு,
அஸ்பெஸ்ரோஸ் சீமெந்து தொழிற்சாலை ஊழியர்கள்.

பிறந்த தின வாழ்த்து

செல்வி பிருந்தா

சுன்னாகம் மயிலணியைச் சேர்ந்த நில அளவையாளர் சிற்றம்பலம் சாந்தா தம்பதிகளின் ஏக புதல்வி பிருந்தா இன்று (7-5-86) 'சாந்தபுரி' இல்லத்தில் அண்ணா கிருஷ்ணா, தம்பி ஆனந்த் ஆகியோருடன் தனது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார் பிருந்தா பல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு வாழ சுன்னாகம் சந்திரசேகரப் பிள்ளையாரை வேண்டுகிறோம்.

த. சிவா

'சாந்தபுரி',
மயிலணி, சுன்னாகம்.

திருக்கேதீச்சர உற்சவம் 14 இல் ஆரம்பம்

அப்பர் சிலையும் தரிசனத்துக்கு

யாழ்ப்பாணம், மே. 7

திருக்கேதீச்சர ஆலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 14 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

இவ்விழா 23 ஆம் திகதி தீர்த்தோற்சவ விழாவுடன் நிறைவு பெறும்.

விழாக்காலத்தில் அப்பர் சுவாமி யின் திருவுருவச் சிலை பக்தர்களின் தரிசனத்துக்காக வைக்கப் படும்.

சுவாமிகளின் உருவச் சிலை சென்ற மாதம் 8ம் திகதியிலிருந்து திருக்கேதீச்சரத்துக்கு பவனியாக எடுத்து [illegible] சுவாமி கோயிலில் நிலைநிறுத்தப்பட்டுள்ளது.

12 ஆம் திகதி சுவாமிகளின் உருவச்சிலை திருக்கேதீச்சரத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

அன்றைய தினம் பக்தர்களும் திருக்கேதீச்சரத்திற்கு யாத்திரை செய்வதற்காக விசேஷ பக்திசேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

திருக்கேதீச்சரத் செல்வியும்பும் யாத்திரிகர்கள் இம்மாதம் 8ஆம் திகதிக்கு முன் நல்லூர் ஆதீன முதல்வருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

அன்புள்ளம் கொண்டவர்கள் கடவுளைத் தேடப் போகும் வழியில் ஏழைகளைக் கண்டால், முதலில் அவர்களை ஆதரியுங்கள்.

– சுவாமி விவேகானந்தர்

உதயன்

இன்றைய – விசேஷம் – ஏகாதசி

வ 15, 2வது ஒழுங்கு தொலைபேசி 24505
விற்பனை பிரிவு 21078
வருமானம் 07-05-86 வ 18

வளரும் நாடுகளுக்கு உதவாதுபோனால் பாதிப்பு வரும்

உலக வங்கித் தலைவர் குளோசன் வளர்ந்த நாடுகளுக்கு எச்சரிக்கை

வாஷிங்டன், மே 6

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சிக்கு அபிவிருத்தி அடைந்த நாடுகள் உதவ வேண்டும். அப்படி உதவவில்லை எனின் அதனால் வரக்கூடிய மோசமான பாதிப்புகளை வளர்ந்த நாடுகள் அனுபவிக்க வேண்டிவரும்.

மேற்கண்டவாறு பதவி விலகும் உலக வங்கித் தலைவர் டாக்டர் குளோசன் வளர்ந்த வல்லரசு நாடுகளை எச்சரித்துள்ளார்.

வாஷிங்டனில் அதிகாரிகள் கலந்து கொண்ட மாநாடொன்றில் உரையாற்றும் போதே குளோசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்; வளர்ச்சியடைந்த நாடுகள் தமது இராணுவச் செலவுகளுக்கென ஆண்டொன்றுக்கு ஒரு லட்சம் கோடி டாலர்களைச் செலவிடுகின்றன.

இராணுவத்துக்கு ஒரு டாலர் செலவு செய்வதாக வரக்கூடிய பாதுகாப்பை விடவும் அபிவிருத்திக்காகச் செலவிடும் ஒரு டாலராக வரக்கூடிய பாதுகாப்பு பலமுள்ளதாகும்.

இதைக் கருத்திற் கொண்டு வளர்ச்சி அடையும் நாடுகளுக்கு வளர்ந்த நாடுகள் கடுதலாக உதவி அளிக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்கள் மட்ட 'சார்க்' மாநாடு

ஷிலாங்கில் பிரதமர் ராஜீவ் தொடக்கி வைக்கிறார்

புதுடில்லி, மே 6

தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்பு சம்பந்தமான அமைச்சர்கள் மட்ட மாநாட்டை பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி தொடக்கி வைக்கிறார்.

ஷிலாங்கில் நடைபெறும் இந்த மாநாட்டில் 7 உறுப்பு நாடுகளையும் சேர்ந்த 42 உறுப்பினர்கள் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பாரதக் குழுவுக்கு மகளிர் நலத்துறை மத்திய மந்திரி மாக்கிரட் ஆல்வா தலைமை தாங்குகிறார்.

வளர்ச்சிப் பணியில் மகளிர் பங்கு என்னும் விஷயம் தொடர்பான அம்சங்களை இந்த மாநாடு விவாதிக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்ற மாதம் புதுடில்லியில் நடந்த 'சார்க்' அமைப்பின் அதிகாரிகள் மட்ட மாநாட்டு அறிக்கையை மாநாடு பரிசீலித்து விரிவான அறிக்கை ஒன்றைத் தயாரிக்கும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

மறைந்த பாரதப் பிரதமர் இந்திரா காந்தியின் நினைவாக அமைக்கப்படவிருக்கும் மருத்துத் துறை ஆய்வுக்கான பிராந்திய நிறுவனம் ஒன்றுக்கு பிரதமர் ராஜீவ் அடிக்கல் நாட்டுவார்.

ஒலிவர் தம்போ பாரதம் வருகிறார்

புதுடில்லி, மே 6

தென் ஆபிரிக்கா விடுதலை இயக்கமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ பாரதம் வருகிறார்.

பாரதத்தில் 5 நாட்கள் வரை தங்கி இருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது

அவர் இங்கு தங்கி இருக்கும் காலத்தில் பாரதத் தலைவர்கள் பலருடன் தென் ஆபிரிக்க நிலைமைகள் பற்றி விவாதிப்பார் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மதுரை மாநாடு புகழ்டும் பாடம்

தமிழ் ஆதரவாளர் அமைப்பின் (ரெசோ) முதலாவது மாநாடு மதுரையில் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. வெற்றிகரம் என்ற சொல்லை இங்கு அளந்துதான் குறிப்பிடுகின்றோம்.

ஈழத்தமிழருக்கு உடன் அரசியல் நிவாரணம் கிடைக்கும் விதத்தில் அல்லது அவர்கள் அழிவைத் தடுக்கும் விதத்தில் மாநாட்டில் ஏதும் நடந்துவிடவில்லை என்பது உண்மை.

ஆனால் இந்தியாவின் பல மாநிலங்களையும் பகுதிகளையும் சேர்ந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்டன.

தென்னிந்தியாவைச் சேர்ந்த ஆந்திரா, கர்நாடகம் முதற்கொண்டு வடஇந்தியாவில் உள்ள பஞ்சாப், அஸ்ஸாம் வரை ஈழத்தமிழர்களின் அவலநிலை உணரப்பட்டுள்ளது என்பதற்கு மதுரை மாநாடு சாட்சி

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழகம் விடும் தான் அக்கறை கொண்டுள்ளது. தமிழகத்தின் தூண்தொலாக, அங்கு தனக்கிருக்கும் அரசியல் செல்வாக்கை ஸ்திரப்படுத்தவும், வளர்க்கவும் இந்திரா காங்கிரஸ் மத்திய அரசும் அதில் அக்கறை காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு இலங்கையில் உள்ள பெரும்பான்மையை சமூகத்தைச் சேர்ந்த சில தலைவர்கள் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவ்வாறே தமது மக்களுக்குச் சொல்லியும் வருகிறார்கள்.

அதாவது தமிழ் மக்களுக்குத் தாம் இழைக்கும் அநீதிகளை இந்தியாவில் தமிழகம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் வாழும் மக்கள் ஆதரிக்கிறார்கள். வடஇந்திய மக்கள் தமது பக்கம் தான் என்றவாறு எண்ணுகிறார்கள்.

பூனைகண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டுவிடுவது உண்டா? அப்படி நினைக்கும் சிங்களத் தலைவர்களுக்கு அது தவறு என்பதை மதுரை மாநாடு இடித்துக் காட்டிவிட்டது.

இலங்கைத் தமிழ் மக்கள் அமிர்தொழிக்கப்படுவதை தமிழக மக்கள் மட்டும் அல்ல, ஏனைய மாநில மக்களும் பார்த்துக்கொண்டு — சகித்துக்கொண்டு இருக்கமாட்டார்கள் என்பதனை அந்த மாநாடு நிரூபித்திருக்கிறது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மக்கள் அனைவருமே, அனைத்திந்தியக் கட்சிகள் எல்லாமே அக்கறை காட்டுகின்றன.

இதனை மதுரை மாநாடு, இலங்கைத் தலைவர்களுக்கு மட்டுமன்றி உலகத்துக்கும் எடுத்து உரைத்துவிட்டது. அது ஒரு பெரும் வெற்றி.

அதனால்தான் சமகம் எவதுத் தமிழ் வளர்ந்த மதுரையில் நடந்த ஈழத்தமிழர் ஆதரவு இயக்கத்தின் முதலாவது மாநாடு வெற்றிகரமாக அமைந்தது என்று குறிப்பிடுகிறோம்.

* இலங்கைப் பிரச்சினையில், இந்தியா, மத்தியஸ்தத்துடனோடு மட்டும் நின்றுவிடாமல், பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கத் தீவிரமாகப் பாடுபட வேண்டும்.
* இலங்கைப் பிரச்சினையை, ஐ. நா., அணிசேரா நாடுகள் இயக்கம் ஆகியவற்றில் இந்தியா எழுப்ப வேண்டும்.
* இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு தனது கொள்கையைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று நிர்ணயங்களும் மதுரை மாநாட்டில் நிறைவேறியுள்ளன. அவையும் ஈழத் தமிழர் பிரச்சினையில் அகில இந்தியாவுக்கும் உள்ள அக்கறையைப் பிரதிபலிக்கின்றன.

இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவருமான திரு. அட்டல் பிஹாரி வாஜ்பாய் இந்த மாநாட்டில் ஆற்றிய உரையும் குறிப்பிடப்பட வேண்டியது.

இலங்கை இனப் பிரச்சினையில் பலர்தரும் கொள்கையை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும். மத்திய அரசின் இப்போதைய கொள்கை கொள்கையற்றதாக உள்ளது இவ்வாறு திரு வாஜ்பாய் கொள்கை திருக்கிறார்.

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தெளிவற்ற போக்கையும், விட்டுக்கொடாத தன்மையையும் கடைப்பிடிக்கிறது.

அதனை மத்தியஸ்தத்துக்கு அழைத்து வரும் இந்தியாவும் தெளிவற்ற போக்கைக் கடைப்பிடித்தால் தீர்வு கிடைப்பது எப்படி? எப்போது?

முன்னர் ஒரு தடவை இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போல இரு நாட்டு அரசுகளும் இனியும் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்க முடியாது இருசாராரும் அதனை நன்கு உணர்ந்தாக வேண்டும் உடன் விளைவுதரும் செயற்பட்டில் இறங்க வேண்டும்

ஆபிரிக்க முயலுக்கு பிரான்ஸில் சிகிச்சை

பிரான்ஸ், மே 6

புழு வாய்ந்த ஆபிரிக்க முயல் ஒன்றுக்கு பிரான்ஸில் மேற்கொள்ளப்பட்ட சத்திர சிகிச்சை ஒன்றன் பின் குணமடைந்து நாடு திரும்பியுள்ளது

காலில் ஏற்பட்ட எலும்பு முறிவு சிகிச்சைக்காகவே இந்த முயல் பிரான்ஸுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆயிரக்கணக்கான மைல்கள் விமானப் பிரயாணம் மேற்கொண்டு ஆரோக்கியத்துடன் மீண்டுள்ள இந்த முயலுக்கு ஆறு மாதங்களே வயது

தனது மேடைக்காட்சிகளுக்கு இது இப்பொழுது மீண்டும் தயாராக்கொண்டிருப்பதகி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

முஸ்லிம் பெண் உரிமை மசோதா நிறைவேறியது

லோக்சபையில் ஆதரவாக 372 வாக்குகள்

புதுடில்லி, மே 6

முஸ்லிம் பெண்கள் விவாகரத்து உரிமை மசோதா லோக்சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் நிறைவேறியதைப் பெற்றுள்ளது.

372 வாக்குகள் சாதகமாகவும் 64 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டது.

ஆளும் காங்கிரஸ் உறுப்பினர்களுடன் முஸ்லீம் லீக் மாநாட்டுக் கட்சி, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மற்றும் சோக்தள் உறுப்பினர். ஜனதா உறுப்பினர் ஆகியோரும் மசோதாவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த மசோதாவைக் காரசாரமாகக் கண்டித்துள்ளனர்.

இந்த மசோதா பொது அபிப்பிராயத்துக்கு மக்கள் முன்வைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை அரசு நிராகரித்ததால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் வெளிநடப்புச் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய யாப்பின் மதச்சார்பற்ற தன்மைக்கு இந்த மசோதா சமூகம் கற்பிப்பதாகவும், இன்னும் முஸ்லிம் திவிரவாத வேகத்துக்கு இது கட்டவிழ்ந்து விட்டதாகவும் குற்றச் சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

சட்ட மந்திரி அருண் சேத் முன்வைத்த இந்த மசோதா விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்ணின் பராமரிப்பு உரிமையை உத்தரவாதப் படுத்துகிறது எனக் கூறப்படுகிறது

விவாகரத்து செய்த முன்னாள் கணவரிடமிருந்து ஜீவனாம்சம் பெறுவதற்கு இந்த சட்டம் இடமளிக்கிறது.

வெளி உலகில்

ஒலிவர் தம்போ பாரதம் வருகிறார்

புதுடில்லி, மே 6

தென் ஆபிரிக்கா விடுதலை இயக்கமான தேசிய காங்கிரஸ் தலைவர் ஒலிவர் தம்போ பாரதம் வருகிறார்.

பாரதத்தில் 5 நாட்கள் வரை தங்கி இருப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது

அவர் இங்கு தங்கி இருக்கும் காலத்தில் பாரதத் தலைவர்கள் பலருடன் தென் ஆபிரிக்க நிலைமைகள் பற்றி விவாதிப்பார் என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநாடு புகழ்டும் பாடம்

தமிழ் ஆதரவாளர் அமைப்பின் (ரெசோ) முதலாவது மாநாடு மதுரையில் வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. வெற்றிகரம் என்ற சொல்லை இங்கு அளந்துதான் குறிப்பிடுகின்றோம்.

ஈழத்தமிழருக்கு உடன் அரசியல் நிவாரணம் கிடைக்கும் விதத்தில் அல்லது அவர்கள் அழிவைத் தடுக்கும் விதத்தில் மாநாட்டில் ஏதும் நடந்துவிடவில்லை என்பது உண்மை.

ஆனால் இந்தியாவின் பல மாநிலங்களையும் பகுதிகளையும் சேர்ந்த மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் மாநாட்டில் கலந்து கொண்டன.

தென்னிந்தியாவைச் சேர்ந்த ஆந்திரா, கர்நாடகம் முதற்கொண்டு வடஇந்தியாவில் உள்ள பஞ்சாப், அஸ்ஸாம் வரை ஈழத்தமிழர்களின் அவலநிலை உணரப்பட்டுள்ளது என்பதற்கு மதுரை மாநாடு சாட்சி

ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்தியாவைப் பொறுத்தவரையில் தமிழகம் விடும் தான் அக்கறை கொண்டுள்ளது. தமிழகத்தின் தூண்தொலாக, அங்கு தனக்கிருக்கும் அரசியல் செல்வாக்கை ஸ்திரப்படுத்தவும், வளர்க்கவும் இந்திரா காங்கிரஸ் மத்திய அரசும் அதில் அக்கறை காட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு இலங்கையில் உள்ள பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த சில தலைவர்கள் இன்னமும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் அவ்வாறே தமது மக்களுக்குச் சொல்லியும் வருகிறார்கள்.

அதாவது தமிழ் மக்களுக்குத் தாம் இழைக்கும் அநீதிகளை இந்தியாவில் தமிழகம் தவிர்ந்த ஏனைய மாநிலங்களில் வாழும் மக்கள் ஆதரிக்கிறார்கள். வடஇந்திய மக்கள் தமது பக்கம் தான் என்றவாறு எண்ணுகிறார்கள்.

பூனைகண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டுவிடுவது உண்டா? அப்படி நினைக்கும் சிங்களத் தலைவர்களுக்கு அது தவறு என்பதை மதுரை மாநாடு இடித்துக் காட்டிவிட்டது.

இலங்கைத் தமிழ் மக்கள் அமிர்தொழிக்கப்படுவதை தமிழக மக்கள் மட்டும் அல்ல, ஏனைய மாநில மக்களும் பார்த்துக்கொண்டு — சகித்துக்கொண்டு இருக்கமாட்டார்கள் என்பதனை அந்த மாநாடு நிரூபித்திருக்கிறது. இலங்கைத் தமிழர் விவகாரத்தில் இந்திய மக்கள் அனைவருமே, அனைத்திந்தியக் கட்சிகள் எல்லாமே அக்கறை காட்டுகின்றன.

இதனை மதுரை மாநாடு, இலங்கைத் தலைவர்களுக்கு மட்டுமன்றி உலகத்துக்கும் எடுத்து உரைத்துவிட்டது. அது ஒரு பெரும் வெற்றி.

அதனால்தான் சமகம் எவதுத் தமிழ் வளர்ந்த மதுரையில் நடந்த ஈழத்தமிழர் ஆதரவு இயக்கத்தின் முதலாவது மாநாடு வெற்றிகரமாக அமைந்தது என்று குறிப்பிடுகிறோம்.

* இலங்கைப் பிரச்சினையில், இந்தியா, மத்தியஸ்தத்துடனோடு மட்டும் நின்றுவிடாமல், பாதிக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழரைப் பாதுகாக்கத் தீவிரமாகப் பாடுபட வேண்டும்.
* இலங்கைப் பிரச்சினையை, ஐ. நா., அணிசேரா நாடுகள் இயக்கம் ஆகியவற்றில் இந்தியா எழுப்ப வேண்டும்.
* இலங்கைப் பிரச்சினை சம்பந்தமாக மத்திய அரசு தனது கொள்கையைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இந்த மூன்று நிர்ணயங்களும் மதுரை மாநாட்டில் நிறைவேறியுள்ளன. அவையும் ஈழத் தமிழர் பிரச்சினையில் அகில இந்தியாவுக்கும் உள்ள அக்கறையைப் பிரதிபலிக்கின்றன.

இந்தியாவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும், பாரதிய ஜனதாக் கட்சியின் தலைவருமான திரு. அட்டல் பிஹாரி வாஜ்பாய் இந்த மாநாட்டில் ஆற்றிய உரையும் குறிப்பிடப்பட வேண்டியது.

இலங்கை இனப் பிரச்சினையில் பலர்தரும் கொள்கையை இந்திய அரசு கடைப்பிடிக்க வேண்டும். மத்திய அரசின் இப்போதைய கொள்கை கொள்கையற்றதாக உள்ளது இவ்வாறு திரு வாஜ்பாய் கொள்கை திருக்கிறார்.

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தெளிவற்ற போக்கையும், விட்டுக்கொடாத தன்மையையும் கடைப்பிடிக்கிறது.

அதனை மத்தியஸ்தத்துக்கு அழைத்து வரும் இந்தியாவும் தெளிவற்ற போக்கைக் கடைப்பிடித்தால் தீர்வு கிடைப்பது எப்படி? எப்போது?

முன்னர் ஒரு தடவை இப்பத்தியில் நாம் குறிப்பிட்டது போல இரு நாட்டு அரசுகளும் இனியும் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருக்க முடியாது இருசாராரும் அதனை நன்கு உணர்ந்தாக வேண்டும் உடன் விளைவுதரும் செயற்பட்டில் இறங்க வேண்டும்

கோரம் இல்லை

கிளிநொச்சி, மே 7

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 84 ஆம் ஆண்டு புனரமைக்கப்பட்ட கிளிநொச்சி திருநெறிக்கழகக் கூட்டம் கோரமின்மையால் தடைப்பட்டது.

கடந்த 30 – 4 – 86 இல் கிளிநொச்சிக் கந்தசுவாமி கோயில் ஆலய முன்றலில் இக்கூட்டம் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

தீவுப்பகுதியிலும் கண்நோய்

மண்டைதீவு, மே.7

தீவுப்பகுதி எங்கும் கண்நோய் பரவிவருகின்றது.

மண்டைதீவு, அல்லைப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களைச் சேர்ந்த அனேகர் இந்த நோயால் வெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

தேரரின் வடபகுதி அனுபவங்கள்:

புத்தர் கனவில் தோன்றி

தெரிவித்த செய்தி பிரதமரை

13 தடவைகள் சந்திக்க வைத்தது

காங்கேசன்துறை திஸ்ஸ விகாரையின் விகாராதிபதியாக இருந்த வண.தெல்கெல்ல பதுமசிரி தேரர் 'யாழ்ப்பாணத்தில் என் அனுபவங்கள்' - என்ற தலைப்பில் சிங்களத்தில் பத்தகம் ஒன்றை எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'சற்றர்டே ரிவியூ' என்ற ஆங்கில வார சஞ்சிகை இப் புத்தகத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பை வெளியிட ஆரம்பித்துள்ளது.

இதன் தமிழாக்கத்தின் மூன்றாம் பகுதி இன்று பிரசுரமாகின்றது.

புத்தபகவான் கனவில் தோன்றிச் சொன்னதை செய்தி, பிரதம மந்திரியை பதிக்குமுன்று தரம் சந்திக்க வைத்தது.

அதிகாலை 3 மணிக்குச் சென்றேன் 5-15 மணி வளவில் தான் பிரதமரைச் சந்தித்தேன்.

"தயவு செய்து ஏழைகளுக்கு 50 வீடுகளைக் கட்டுங்கள்" - இப்படி நான் பிரதமரைக் கேட்டேன். அனுமதி வழங்கப்பட்டது.

இவ்வீடுகளைக் கட்டக் காங்கேசன்துறையில் ஒரு துண்டுக் காணியைத் தரும்படி சீமெந்துக் கூட்டுத்தாபனத்தைக் கேட்டேன். அமைச்சர் சிறிமத்திபண்டாரநாயகவிடமிருந்தும் விண்ணப்பித்தேன். காணி கொடுக்கப்படும் என்பதாகக் கடிதம் கிடைத்த பதில்.

அனுராதபுரம் சர்வோதய நிலையத்துக்குச் சென்றேன். பொருள்களைத் தந்தால் வீடுகளைக் கட்டித்தர அவர்கள் ஒப்புக் கொண்டனர்.

அந்தக் காணியில் வீடுகளைக் கட்டும் வேலைகள் தொடங்கும் சமயம் அமைச்சரிடமிருந்து உத்தரவு ஒன்று வந்தது.

"காணி கொடுக்கப்படமுடியாது ஹோட்டல் கட்ட காணி தேவை" - இதுவே அமைச்சரின் உத்தரவு.

இது ஒரு வேதனையான அனுபவம். கட்டட வேலை நிறுத்தப்பட்டது.

நாம் ஆஸ்பத்திரிகளுக்கு முச்சக்கர நாற்காலிகள் தன்டனிப்புச் செய்தோம் இவற்றைத் தந்து உதவியவர்களின் பெயர்கள் சிங்களத்திலும் தமிழிலும் அவற்றில் இடும் பொயர்ப்பை வெளியிட ஆரம்பித்துள்ளது.

விகாரை வழியாக ஒரு கிராம சேவையாளர் அடிக்கடி போய்வந்தார் விகாரையைத் தாண்டிச் செல்லும் முன்னர் சைக்கிளில் இருந்து இறங்கி விடுவார்.

ஒருநாள் அவரைக் கூப்பிட்டு ஏன் சைக்கிளை விட்டு இறங்கிச் செல்கிறீர் என்று கேட்டேன்.

அவர் சொன்னார்:

நாம் பௌத்தர்கள் அல்லர். ஆனால் பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து பணிபுரிவதுமேன் கூடாதுஞ்ஞவ பொவிஸில பணியாற்றினேன். எப்படி மரியாதை செலுத்த வேண்டும் என்பது எமக்குத் தெரியும். ஆகவேதான் சைக்கிளில் இருந்து இறங்கிச் செல்கின்றேன்.

இப்படி அவர் சொன்னார்.

நான் அவரை விகாரைக்கு அழைத்து எனது இராமத்தில் இருந்தவர்த்த தமிழ் அவ்வாவுக்கு [illegible] உரையாட [illegible] நடந்தது. [illegible] விகாரை [illegible] அடிக்கடி [illegible] க்கு அவர் வந்து செல்லத் தொடங்கினார்.

தனது பளாவிலிருந்து முதலில் பழுத்த பழத்தை அவர் விகாரைக்கு கொண்டுவந்து தந்தார். எமக்கு உப்பாசிய பழங்களும் கொண்டு வந்து தந்தார். நானும் அவருக்கு பல வழிகளில் உதவி செய்தேன்.

அவர் குடிப்பதில் ஈடுபட்டிருந்தார். அவரின் மனைவி ஒருநாள் என்னிடம் வந்து முறையிட்டார்.

"எனது கணவர் நன்றாகக் குடிப்பார். குடிப்பழக்கத்தை உங்களால் தான் விடச் செய்ய முடியும்" - இப்படி அவரின் மனைவி சொன்னார்.

அவர் என் ஆலோசனையைக் கேட்டு குடிப்பழக்கத்தை விட்டார். பின்னர் அவருக்கு வகாரன் நடுக்கம் வந்தது. சுகயீனம் பிடித்தது.

குடிக்கச் சொல்லி டாக்டர்கள் கூறினர். அவர் மீண்டும் குடிக்கத் தொடங்கினார். பின்னர் அவரின் நிலைமை மோசமடைந்தது. அவரின் மரணப்படுக்கையில் அவரைப் போய்ப் பார்த்தேன்.

எனது கையைப் பிடித்துக்கொண்டு அவர் சொன்னார்: "எனக்குக் காட்டிய அதே அன்புடன் எனது குடும்பத்தையும் பார்த்துக்கொள்ளுங்கள் – இப்படி அவர் என்னைக் கேட்டுக் கொண்டார்.

நான் அவரின் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டேன் மாரடைப்பினால் மரணவீடு ஒன்றில் கலந்துகொண்ட முதலாவது பிக்கு நான்தான். எல்லோரும் பார்த்து ஏளனம் [illegible] (தொடரும்)

பொய்யாமொழி

குறள்:

எளிதென இல்லிறப்பான் எய்துவெஞ்சொல்லொன்றும்
விளியாது நிற்கும் பழி.

பொருள்:

இச்செயல் எளியது என எண்ணிப் பிறனுடைய மனைவியிடம் நெறிதவறிச் செல்கின்றவன், எப்போதும் அழியாமல் நிலைநிற்கும் பழியை அடைவான்.

பாக் ஆயுதம்பிரச்சினையை தீர்க்கவா? வளர்க்கவா?

குமுதம் ஆசிரியர் தலையங்கம்

இலங்கைக்கு பாகிஸ்தான் ஆயுதம் வழங்கினது பிரச்சினையை தீர்க்கவா? அல்லது வளர்க்கவா?

குமுதம் சஞ்சிகையின் மேமாதம் 1 ஆம் திகதி இதழில் வெளியான ஆசிரியர் தலையங்கத்தில் இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது– "இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் ஆயுதங்கள் வழங்குகிறது ஆனால் பாகிஸ்தான் எங்களுக்கு நண்பன், இந்தியா அல்ல," என்பது ஜெயவர்த்தனாவின் கட்சி

அவர் கொஞ்சம் யோசித்துப் பார்க்க வேண்டும் பாகிஸ்தான் ஏன் ஆயுதங்களை வழங்குகிறது?

பிரச்சினையைத்தீர்ப்பதற்காகவா? அல்லது வளர்ப்பதற்காகவா? விமானிகள் நேர்க்கம். ஜெயவர்த்தனாவுக்கு ஒத்தாசைசெய்ய வேண்டும் என்பதா? அன்று ராஜீவின் தலையிடியை அதிகப்படுத்த வேண்டும் என்பதா?

"என் எதிரிக்கு இந்தியாவிலிருந்து ஆயுதம் வருகிறது" என்ற ஆத்திரப் படுகிறார் இலங்கை அதிபர் ஆனால் எதிரிக்கு கொஞ்சமாவது அவர் சொல்லிருப்பாரா?

நண்பர் யார்? பகைவர் யார்? என்று இனம் கண்டு கொள்ளும் சக்தியை அவர் முற்றிலும் இழந்துவிட்டது வருத்தப்படவேண்டிய விஷயம் அவரை மட்டுமா?

இலங்கைத் தமிழரின் கண்களையும் ஆத்திரம் மறைத்துவிட்டாற்போல் தோன்றுகிறது.

ஆயுத உதவிகளைக் கொண்டு விடுதலைப் புலிகளை ஒழிக்க விடலாம் என்று மனப்பால் குடிக்கும் ஜெயவர்த்தனாவின் நம்பிக்கை எவ்வளவு தவறானதோ? அது போல் இலங்கை அரசை வன்முறையால் பணிய வைத்துவிடலாம் என்ற நினைப்பதும் பயன் தராது.

இந்தியா, இலங்கை, இலங்கைத் தமிழர் என்னோருக்கும் பொதுவான எதிரிகள் சில? உள்ளனர்

சமாதானத்துக்குக் கொஞ்சமும் இடம் தரலாகாது என்றும் சமாதானம் கூடாது என்றும் பிரச்சினைக்குத் தீர்வு உண்டாவதை அது தங்களுடைய பிழைப்புக்குப் பாதகம் ஏற்படுத்தும் என்றும் யார் நினைக்கிறார்களோ— அவர்கள் எந்தத் தரப்பில் இருந்தாலும் சரி— அவர்களே உண்மையான எதிரிகள்

மேலும் மேலும் இக்கட்டுகளை உண்டாக்கவும், கிக்கல் இன்னும் சிக்கலாக்கும்படி பார்த்துக் கொள்ளவும் என்னென்ன ஆக்கிரமங்கள் செய்ய வேண்டுமோ, அவற்றை எல்லாம் யார் வெற்றிகரமாகச் செய்து வருகிறார்களோ அவர்களே உண்மையான எதிரிகள்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு ஒருமுடிவு ஏற்படலாகாது என்று எந்தச் சுயநலக்காரர்கள் அல்லும்பகலும் பாடுபடுகிறார்களோ, அவர்கள் தான் இருதரப்பாருக்கும் பொது எதிரிகள்.

அவர்கள் இனம்கண்டு கொள்ளப்பட வேண்டும். இருதரப்பிலும் ஒதுக்கி வைக்கப்பட வேண்டும்.

இப்படி குமுதம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்புள்ளது.

நாவற்குடாவில் கைதான மூவர் எங்கே?

மட்டக்களப்பு மே 7

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 27 ஆம் திகதி நாவற்குடாவில் வைத்து ஆயுதப்படையினரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்படும் மூன்று இளைஞர்கள் தொடர்பான தகவல் எதுவும் பெறமுடியாமல் உறவினர்கள் திண்டாடுகிறார்கள்.

இசகாயராஜா அல்லது பாபு (23 வயது) செல்வராசா ஸ்ரீகரன் அமரராஜ் (18 வயது) ஆகியோரே இந்த மூவரும் ஆவர்.

இது தொடர்பாக வெற்றிமுரசு பிரதேசங்களுடன் புகார் செய்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DYNAMICA
STEEL & TEAK FURNITURE
for style & quality
WIDE SELECTION. FAIR PRICES
Dynamica Show Room
476, Main Street.
CHUNDIKULI.
(Opposite St. Johns College)

உதயன்
07 05 1986 புதன்கிழமை

தளபாடங்கள்
வீட்டுக்கும் அலுவலகத்துக்கும்
உருக்கிலும் தேக்கிலும்
உங்கள் ரசனைக்கேற்ற தெரிவு
டைனமிக்கா காட்சியறை
476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(செஞ்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

விசித்தரம்

என்ன, முரளித் தம்பி நீங்க நாளை உங்கள் சந்திக்க முடியவில்லை உங்களுக்கும் எல்லாரை கஷ்டம் தெரிஞ்சதாலையாக்கும், அதைப் பொறுப்படுத்த யாரு இருக்கிட்டாம்.

எப்படியும் உங்கள் மெமையில நாலுஞ்சு நாளாகுதல் சந்திக்க வேணும் என்டு முடிவு செய்திருக்கிறன். கடவுள் சித்தத்தால இவி அதுநிறைச்சமாநிர நடக்கும் என்ட நம்பிக்கை.

உங்கட்டச் சொல்ல நினைச்ச பல விஷயங்களை உங்களோட பகிர முடியாமற் போச்சு. அதுகளை நான் மறந்தும் போனேன்.

பண்டாரி வரமாட்டார் என்டு முந்தி ஒரு கதை வந்திது. பிறகு வருவார் என்டு இன்னை அரசு சந்தோஷப்பட்டது.

அவை எல்லாருக்கும் ஒரு ஆண்டு போடுமாப் போலை ராஜீவ் காந்தி தெம்பரத்தை அனுப்பி இருந்தார்.

இவையை அரசாங்கத்தாகு சிலப்பர சக்கரத்தை பேப்பர் பார்த்ததை நினையாய்ப் போச்சு ஒரு மாதிரி அரசாங்கக் நிலைப்பில இருந்து விடுபட்டு அதுகளை வெளியாக்கட்டாமல் சாமித்துச் இதற்பரத்தோடையே பேசி அனுப்பியும் விட்டது.

பண்டாரியும் கடவுத்தரான ஒருமாதிரி வெத்தத்தைக் கக்கத்துக்கு கீழே வைச்சுக் கொண்டு ஏதோ பேச வேணும் என்டதுக்காக பேச, புதிய கருத்துக்களைக் குடுத்தோம் என்ட அளவுக்கு ஆகுதல் அரசு நடந்து கொண்டது.

ஆனால் கொழும்புப் பேப்பர்களைப் பார்த்தவிடை, சிங்களப் பேப்பர்கள் விடு. இன்னெஸ் பேப்பர்கள் சுதந்திரம் விட மோசத்திலும் மோசம்.

சிதம்பரம் ஒரு தமிழர். அவரை ஏன் ராஜீவ் இஞ்சை பேச்சுக்கு அனுப்ப வேணும் என்ட கேள்விதான் விஷயத்தைக் கக்கும் விதத்தில் அதுகள் செய்தியை வெளியிட்டுதுள் சிதம்பரம் குழுவின் இஞ்சை நிக்கிற நேரமே அப்படியான செய்திகளைப் போட்டு குழப்பப்படுத்தி நிக்கினம்.

முந்திப் பார்த்தசாரதி வந்த போதும் அப்படித்தான். அவர் சென்னைக்காரர். தமிழர். தமிழர்களுக்குச் சாதகமாய் நடக்கிறார். அப்படி இப்படி என்டு வேண்டாத கதையை எல்லாம் கதைத்து தள்ளிச்சதுகள்.

ஏதோ ராஜீவும் வந்த புதுசில, பார்த்தசாரதியைப் பிறகு அனுப்பாமல் விட்டிட்டார். அதைப் பிடிச்சுத் தெம்பரத்தையும் வரவிடுவார் என்டு கொழும்புப் பேப்பர்காரர் நினைச்சினமோ என்னமோ...

சந்திரனைப் பார்த்த நாய் குலைச்சது போல என்டு சொல்லுறமை எல்லோ. அப்படி என்டு நினைச்சுக்கொண்டு தெம்பரம் புதுக்கதை போய் விட்டார்.

தெம்பரம் போன கையோடு லலித்தரும் பிரட்டன் போயிட்டார். வடக்கு - கிழக்கு இணைப்பை ஒருமாதிரி திருத்தி புதுக்கி வேணாம் சொல்லுங்கோப் போட்டு எப்படிச் சரிக்கட்டலாம் என்டதை அறிவத்தான் போயிருக்கிறார் என்டு கேள்வி.

பிரிட்டனில் என்ன சமஷ்டி அரசாங்கமும் அரசமைப்பும் இருக்கு? அவர் உண்மையாய்ப் போனது சுப்பிரசாரத்துக்குத் தான் என்டு எனக்குக்காதில விழுந்திது. அதுக்கு இருக்கிற "கன்ரக்" அமைப்புகள் எப்படி என்டு நேரில பார்க்க போனார்.

மக்கள் வங்கியில்

நகைகளை இங்கே பெறத் தவறினால்

பின்னர் கொழும்பில்!

அடகு வைத்தோர் சங்கம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 7

திறம்பட் கொடுப்பதற்கென வடபகுதிக்குக் கொண்டுவரப்பட்ட நகைகளை மீளப் பெற்றுக் கொள்ளத் தவறின் அவை நிறைவிலிமேல் கொழும்பில் தான் பெற்றுக் கொள்ள முடியும்.

ஆயினும் எல்லோருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்தி நகைகளை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்

இவ்வாறு அடகுவைத்தோர் சங்கம் அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறது.

மக்கள் வங்கி காங்கேசந்துறைக் கிளையில் அடகு வைக்கப்பட்ட நகைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (9 ஆம் திகதி)முதல் அடுத்தமூன்று நாள்கள் மீளஒப்படைக்கப்படும்.

நகைமீளவிப்புத் தொடர்பாக பல விளக்கங்களை வாடிக்கையாளர்களுக்குத் தெரிவிக்க வேண்டியிருப்பதால் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு வங்கி முன்பாக சமூக மனிதர்களாகிய வாடிக்கையாளர்கள் அங்கு வரையும் அடகுவைத்தோர் சங்கம் கேட்டுக்கொள்கிறது

அடகுநகைகள் மீளஒப்படைக்கும் திட்டத்தின் கீழ், பணம் செலுத்திய வர்களுக்கு அன்றைத் நகைகளும் மீளவிப்புச் செய்யப்படும்வரை எந்தும்

இவ்வாறு அடகுவைத்தோர் சங்கம் அறிவுறுத்துகிறது.

காரணத்தையிட்டும் ஏனைய வாடிக்கையாளர்கள் மீட்புக்கென பணம் செலுத்தக்கூடாது

இப்படிச் சங்கம் அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்திருக்கிறது

13 மாதங்களில் 3,411தமிழர்கள் கொலை 16,147பேர் கைது

லண்டன் அமைப்பு தகவல்

லண்டன், மே. 6

கடந்த 13 மாதங்களில் 3,411தமிழர் கொல்லப்பட்டனர். 16,147 தமிழர் கைதானார்.

இப்படி லண்டனைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு சர்வதேச ஆய்வகம் அமெரிக்க காங்கிரஸ், சோவட், கனடிய அரசு ஆகியவற்றிற்கு அனுப்பிய மகஜரிற்கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் நிர்மூலமாக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உதவி செய்ய எமரும் இல்லை. அவர்கள் ஒடிந்த தப்புவதற்கு இடமும் இல்லை. எல்லா நாடுகளும் தமிழருக்குக் கதவை மூடியுள்ளன.

ராணுவத்தினரின் நடவடிக்கைகள் தமிழர் வாழ வேண்டியுள்ளனர்

தமிழ் மக்களை அழிக்க இருந்த உலக நாடுகள் காப்பாற்ற முன்வர வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

கர்ப்பத்தடை செய்தோருக்கு காசோலை

நல்லூர், மே 7

வாழ் ஆண்டுதொடங்கியில் 1986 ஜனவரி மாதத்திற்கு முன்பு கர்ப்பத்தடை செய்துகொண்டவர்களிடமிருந்து காசோலை கொடுப்பனவுகளை விரைவில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்

பகல்நேரங்களில் காலை 10 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் தங்கள் அடையாள அட்டையுடன் வந்து இக்காசோலையைப் பெற்றுக்கொள்ளுமாறு வைத்தியசாலைப் பொதுக்காரியாதரப் பணிசோதனர் திரு. வி. தவராசா கேட்டுக்கொள்கிறார்

இதுவரை காசோலை பெறாதவர்களுக்கே இது சொந்தம்

இஸ்லாமிய பணியகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், மே 7

யுனெஸ்கோ நிதியம் செய்யப்பட்டுள்ள ஜமாஅதே இஸ்லாமிய பணியகம் இன்று புதன்கிழமை இரவு 8 30 மணிக்கு அமீர் மௌலவி ஜனாப் பி.ஏ.எம்.கப்பான் ஆலிம் அவர்களால் திறந்து வைக்கப்படும்.

யாழ் கலீமா அப்துல் காதர் வீதியிலுள்ள இக்கட்டிடம் கடந்த ஆறுமாதம் சேதத்துக்குள்ளாகியது.

ஜனாப் ஏ.எல்.எம். நவ்பரின் 'பிரை ஆத்' துடன் ஆரம்பமாகும் இன்றைய நிழ்ச்சிகளில் ஜனாப் எம்.ஏ. [illegible], ஜனாப் எம்.எஸ். அப்துர் ரஹிம் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

விமானி உடையில் கைதான அந்தத் தமிழர் யார்?

கொழும்பு, மே 7

கடந்த சிங்கட்கிழமை பகல் விமானி உடையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தினுள் நுழைந்த தமிழர் ஒருவர் இராணுவப் பொலீஸாரினால் சோதனைசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

அந்த நபர் விமான நிலையத்தினுள் நுழைய உதவி செய்ததாகக் கூறப்படும் இரண்டு ஏயர் லங்கா விமான நிலைய ஊழியர்களும் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்படுகின்றனர்.

பொலீஸார் கைது செய்த சமயம் அந்த நபரிடம் விமானம் ஓட்டும் லைசென்ஸ், பை, பெரு விமானிக்குத் தேவையான சீருடை முதலியன இருந்ததாகக் கூறப்படுகின்றது.

பொலீஸாரின் விசாரணையில் மேலும் பல தகவல்கள் வெளிவந்தன

29-1-86இல் இந்த நபர் கட்டுநாயக்காவில் நிற்ற ஏயர் லங்கா போயிங் விமானத்தில் ஏறி விமானியின் ஆசனத்தில் அமர்ந்து இருந்து புகைப்படம் எடுத்துக் கொண்டாராம்.

தனது விமான ஓட்டி லைசென்ஸ் தொலைந்து விட்டதாக கட்டுநாயக்க பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததற்குரிய அத்தாட்சிக் கடிதமும் இந்த நபரிடம் காணப்பட்டதாம்.

பஸ்களில் மாணவர்களுக்கு முன்னுரிமை கொடுக்குக

வ. பி. போ. சபையின் தலைவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 7

வடபகுதியில் மக்களுக்கு நட்டுப்பாடு ஏற்பட்டுக்கும் இந்த இக்கட்டான கட்டத்திலும் பல சேவைகள் முற்றாக நிறுத்தப்படாமல் அவை யாமல் இயன்றளவு வசதியான போக்குவரத்துச் சேவை ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வடமாநிலப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. சே. கனகரத்தினம் இப்படித் தெரிவித்தார்.

வடமாநிலப் போக்குவரத்துச் சபைக்குத் தேவையான டீசல் குறைவாகவே இருந்து பலத்த சோதனைகளுக்கும் இன்னல்களுக்கும் இடையில் தருவிக்க வேண்டியிருக்கிறது.

வடபகுதி பாடசாலைகளில் இரண்டாம்தவணை ஆரம்பமாகியுள்ளது இந்த வேளையில் ஒரு சில பஸ்களே சேவையிலீடுபடுத்தப்பட்டிருக்கின்றன.

ஆகவே பொதுமக்களும், பிரயாணிகளும் பாடசாலைப் பிள்ளைகளுக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களுக்கு ஒத்தாசை உதவி புரிய வேண்டும்.

சேவையை சீர்படுத்த முழு முயற்சிகள் எடுக்கப்பட்டுக்கின்றன. மிக விரைவில் சேவை ஒழுங்கு படுத்தப்படும்.

—இப்படி அவர் சொன்னார்.

'ரெலோ' . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கூறப்படும் மற்றைய இரண்டு பேர் இளைஞர் கோஷ்டியிடமிருந்து தப்பிச் சென்றுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

காயங்கள் இருவருக்கும் வயிறு அப்பகுதியில் இரவிரவாகத் தேடுதல் நடைபெற்றது.

ஏராளமான இளைஞர்கள் அப்பகுதியை ஆயுதங்கள் சகிதம் சுற்றி வளைத்திருக்கிறார்கள்.

நேற்று இரவுவேளையில் அப்பகுதியில் ஆங்காங்கே 'ரயர்கள்' போட்டு எரிக்கப்பட்டு தேடுதல் நடைபெற்றது.

தப்பி ஓடிய இருவரையும் சரணடையுமாறு ஒலிபெருக்கி மூலம் அப்பகுதியில் அறிவிக்கப்படுகிறது வேண்டுகோள் விடுக்கப்பட்டது

சிறி சபாரத்தினம் உயிரிழந்த செய்தியை இந்த ஒலிபெருக்கிச் செய்தி ஊர்ஜிதப்படுத்தியது.

செய்தி அச்சுக்குப் போகும்வரை கோண்டாவில் வடக்குப் பகுதி, உரும்பராய் பகுதிகளில் தொடர்ந்து தேடுதல் நடைபெற்றுக் கொண்டிருந்ததாக அறியவந்தது.

குட்டிமணி தங்காவுக்கு பின்னர் . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலை இயக்கத் தலைவர் சந்தோசம் சிறி சபாரத்தினம் நீர்வேலி வங்கிக்கொள்ளையடிக்கும் ஒருகுழுவினராக இருந்தவர்.

அவர் நீதிமன்றத்தில் இல்லாமலேயே அவருக்கு எதிரான வழக்கு விசாரிக்கப்பட்டது. முடிவில் குயுள் தண்டனைத்தீர்ப்பு வழங்கப்பட்டது.

இந்த வழக்கில் குற்றவாளியாக காணப்பட்ட குட்டிமணி, தங்கத்துரை ஆகியோருடன் ஆரம்ப காலத்தில் சிறிசபாரத்தினம் இணைந்து செயற்பட்டார்.

குட்டிமணியும், தங்கத்துரையும் பாதுகாப்புமிக்க 'ஸ்ரேலா' இராணுத்த படையினரிடம் அகப்பட்டு வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து கொலைசெய்யப்பட்டதை [illegible]

யாழ்நகரில் வியாழன், வெள்ளி கிழமைகளில் விசர்நாய் தடுப்புமருந்துஏற்றும்இடங்கள்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தில் தற்போது அதிகரித்து வரும் விசர்நாய்க்கடி நோயைத் தடுப்பதற்கு வளர்ப்பு நாய்கள் எல்லாவற்றிற்கும் தடுப்பு மருந்து ஏற்றும் திட்டம் ஒன்றை யாழ்மாநகர சபை ஆரம்பித்துள்ளது.

இதன் பிரகாரம் நாளை வியாழக்கிழமையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் பின்வரும் இடங்களில் தடுப்பு ஊசிமருந்து ஏற்றப்படும்.

நாளை வியாழன் காலை 8-00மணி முதல் 10-00 மணிவரை

* செம். அன்ரனீஸ் கோவில், கொழும்புத்துறை ரோட்.
* துண்டி, வாசிகசாலை, துண்டி வீதி,
* ஆர்ச். செபஸ்தியார் மாதா குருமனை, ஏ. வி. ரோடு.
* கொழும்புத் துறை சனசமூக நிலையம், இலந்தைக்குளம் வீதி.

காலை 10-30 முதல் பிற்பகல் 1-30 வரை

* நாவலப்பன் வாசிகசாலை, கொழும்புத்துறை 3ம் குறுக்குத்தெரு.
* கொய்யாத்தோட்டம் சனசமூக நிலையம், பாக்குளம் ஒழுங்கை.
* சரஸ்வதி சனசமூக நிலையம், சண்டிலிபாய்
* கச்சேரி கிழக்கு சனசமூக நிலையம், சண்டிலிபாய்

பிற்பகல் 2-00 முதல் பிற்பகல் 4-00 வரை

* அரியாலை சனசமூக நிலையம், புங்கங்குளம் வீதி.
* கலைவாணி சனசமூக நிலையம், பொன்னம்பலம் வீதி- அரியாலை.
* குருநகர் ஒழுங்கை சனசமூக நிலையம், நல்லூர் தெற்கு.

வெள்ளி காலை 8, 00 மு. ப10.00 வரை

* மின்சார நிலையம், யாழ்ப்பாண நிலையத்திற்கு அருகாமை.
* பெருமாள் கோவில் சனசமூக நிலையம் வண்ணார்பண்ணை, பெருமாள் கோவிலடி.
* சனசமூக நிலையம், பலாலி வீதி, பருத்தித்துறை வீதி.
* எஸ்.சந்தையடி இல்லம், 563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலை 10-30 முதல் 12-30 வரை

* அத்தியடி சனசமூக நிலையம், அத்தியடி.
* நரிவன்குண்டு நூலக நிலையம், நல்லூர் வீதி,
* 141, இராசாவின் தோட்டம் வீதி
* [illegible] அலுவலகம், சண்டிலிபாய்.

13 மாதங்களில் 3,411தமிழர்கள் கொலை 16,147பேர் கைது

லண்டன் அமைப்பு தகவல்

லண்டன், மே. 6

கடந்த 13 மாதங்களில் 3,411தமிழர் கொல்லப்பட்டனர். 16,147 தமிழர் கைதானார்.

இப்படி லண்டனைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு இயங்கும் தமிழ்நாடு சர்வதேச ஆய்வகம் அமெரிக்க காங்கிரஸ், சோவட், கனடிய அரசு ஆகியவற்றிற்கு அனுப்பிய மகஜரிற்கூறப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர் நிர்மூலமாக்கப்படுகின்றனர். அவர்களுக்கு உதவி செய்ய எமரும் இல்லை. அவர்கள் ஒடித் தப்புவதற்கு இடமும் இல்லை. எல்லா நாடுகளும் தமிழருக்குக் கதவை மூடியுள்ளன.

ராணுவத்தினரின் நடவடிக்கைகள் தமிழர் வாழ வேண்டியுள்ளனர்

தமிழ் மக்களை அழிக்க இருந்த உலக நாடுகள் காப்பாற்ற முன்வர வேண்டும்.

இப்படி அந்த மகஜரில் கூறப்பட்டுள்ளது.

மெல்போர்னில் சிங்களவர் ஆர்ப்பாட்டம்

மெல்போர்ன், மே 6

ஆஸ்திரேலியாவின் தலைநகரான மெல்போர்னில் இந்திய எயர்லைன்ஸ் கந்தோருக்கு முன்பாக சிங்களப் பிரஜைகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

கட்டுநாயக்கா விமானக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை எதிர்த்தும் போராளிகளுக்கு இந்தியா ஆயுதம் அளிப்பதை ஆட்சேபித்தும் இவர்கள் கோஷங்கள் எழுப்பினர்.

"சொந்த சகோதரரின் நாட்டுக்கு இந்தியா பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கிறது"—

"ராஜீவின் அம்மாவைக் கொன்ற குண்டே இன்று இலங்கையையும் கழிக்கிறது."

"சர்வதேச பாதுகாப்புக்கு இந்திய ஏகாதிபத்திரத்தினால் ஆபத்து"—

மேற்கண்டவாறு எழுதப்பட்ட பதாகைகளையும் அவர்கள் பிடித்துக்கொண்டிருக்கக் காணப்பட்டனர்.

தெல்லிப்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட்டிருக்கலாம் எனவும் காயமடைந்திருக்கலாம் எனவும் ஆரூடப்பட்டது.

கோண்டாவில் சந்தியிலிருந்து வயாவிளான் வரை மலாலி வீதியூடாக சென்ற சகல வாகனங்களும் தெற்கு இளைஞர் கோஷ்டியினால் வழிமறிக்கப்பட்டன.

எனினும் வேறுபாதையூடாக போக்குவரத்துச் சேவை நடைபெற்றது

தெல்லிப்பளை, ஏழாலை பகுதிகளில் ஒரே குண்டு வெடிப்புச் சத்தங்களும் துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும் கேட்டவண்ணம் இருந்தன

ஹெலிக்கொப்டர் ஒன்றும் இப்பகுதிகளிக் கறிறித் கிரிந்ததாகத் தெரிய வருகிறது.

தலைமன்னார் . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

கலாம் என அஞ்சப்படுகின்றது.

இச்சம்பவத்தால் கடற்படைப் படகு ஒன்றும் சேதம் அடைந்தது.

பலத்த ஹெலிக்கொப்டர் பாதுகாப்புடன் தலைமன்னார் கரைப்பகுதிக்கு கடற்படைப்படகு கொண்டு வரப்பட்டதாக அறியப்படுகிறது.

சம்பவத்தைத் தொடர்ந்து பல பிரதேசங்களை அப்பகுதியை சுற்றி வளைத்து தேடுதல் நடத்தின. பிரதேச வேட்டுக்கள் கடலில் தீர்க்கப்பட்டன சம்பவத்தை அடுத்து தலைமன்னார் கரையோரப் பகுதிக்கு சோதனைச் சேவை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சகல வங்கிகளையும் கட்டுப்படுத்த சட்டம்

நாடாளுமன்றம் வருகிறது

கொழும்பு, மே 7

நாட்டில் உள்ள சகல வங்கிகளையும் கட்டுப்படுத்தும் சட்டம் ஒன்று விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த ஆய்வின் பின்னரே நிதி அமைச்சு இச்சட்ட மூலத்தைக் கொண்டுவர தீர்மானித்தது

ஒரு தனிச்சட்டத்தின் கீழ் சகல வர்த்தக வங்கிகளையும் மேற்பார்வை விடக்கூடியதாக புதிய வங்கி அதிகாரங்கள் புதிய சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ளன.

தனியார் வங்கிகள் நாணயச்சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

மக்கள்வங்கி, இலங்கை வங்கி, செமிப்பு வங்கி ஆகியவை தனியான சட்டம் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

★ ரயிலில் பார்சல்

கொழும்பு, மே 7

மட்டக்களப்பில் இருந்து தேற்றப் பகல் கொழும்பு சென்ற ரயிலில் பார்சல் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டது

ஆயுதப்படையினர் தகவலின்பேரில் ரயில் நிலையம் வந்து பார்சலைச் சோதித்துப் பார்த்தனர், பார்சலை வெடி வைத்து பிரித்துப் பார்த்த போது மதுக் சம்பந்தமான புத்தகங்கள் உள்ளே இருந்தன

விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

கடந்த 20 ஆண்டுகளாக நடந்த ஆய்வின் பின்னரே நிதி அமைச்சு இச்சட்ட மூலத்தைக் கொண்டுவர தீர்மானித்தது

ஒரு தனிச்சட்டத்தின் கீழ் சகல வர்த்தக வங்கிகளையும் மேற்பார்வை விடக்கூடியதாக புதிய வங்கி அதிகாரங்கள் புதிய சட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ளன.

தனியார் வங்கிகள் நாணயச்சட்டத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

மக்கள்வங்கி, இலங்கை வங்கி, செமிப்பு வங்கி ஆகியவை தனியான சட்டம் மூலம் நிர்வகிக்கப்படுகின்றன.

ஆங்கில வகுப்புகள்

தமிழ்மொழிமூல ஆசிரியர்கள், உயர் கல்வியினர், தொழிலாளருக்கு, இம்மாதம் 10ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்குச் சித்தன்வெளிச் சந்தி, மாதர் சங்கக் கட்டடத்தில் ஆங்கில வகுப்புத் தொடங்கும். ஆறு முதல் G.C.E உயர்தர மாணவருக்கும் வெளிநாடு செல்வோருக்கும், வட்டுக்கோட்டை மாவடிச் சந்தி கலா நிலையத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

போதனாசிரியர்,
திரு. க. கயிலாயநாதன்
[பலாலி ஆசிரியர் கலாசாலை முன்னாள் ஆங்கில விரிவுரையாளரும் அதிபரும்]

வெளிவந்துவிட்டது!
புதிய சமூகக் கல்வி
7ஆம் ஆண்டு
ஆலோசனை
சி. நடராஜா B-A. Dip. In Ed.
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த. ஏகாதசி ஆனந்தன்போல் கிமிட்டெட், 807, விசுவாநாதன் வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,5 ஆம் குறுக்கு விசுவாநாதன் வீதி, யாழ்ப்பாணம். வெளியீட்டு திகதி 07-05-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org